**அம்பலாந்தோட்டை பிரதோச சபை**
**ஹம்பாந்தோட்டை மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 28 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்பித்திருந்ததுடன், அந்த நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 ஆகஸ்ட் 31 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்ந்து அம்பலாந்தோட்டை பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டு குறைபடுகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(அ) 91 ஆம் இலக்க நாட்குறிப்பின் மூலம் ரூபா 8,000,000 தொகை பிழையான முறையில் திரண்ட நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டு மூலதன உதவி கணக்கிற்கு செலவு வைத்திருந்தமையால் அப்பெறுமதியினால் ஆண்டிற்கான வருமானம் மிகையாகும் மற்றும் திரண்ட நிதிய மீதி குறைவாகவும் காட்டப்பட்டுள்ளது.

(ஆ) மீளாய்வாண்டு தொடர்பாக 2018 ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட ரூபா 80,319 இற்கான செலவு தொடர்பாக கடன் கொடுத்தோர் ஏற்பாடுகள் செய்திருக்கவில்லை.

(இ) பிரதேச சபை வரவேற்பு அலுவலகம் தயாரிப்பதற்காக மீளாய்வண்டின் போது செலவிடப்பட்டிருந்த ரூபா 100,335 இற்கான தொகையினை மூலனப்படுத்தியிருக்கவில்லை.

(ஈ) 2010 ஆண்டிற்கான ரூபா 22,625 தொகை பெறவேண்டிய முத்திரைக் கட்டணத்திற்காக கடன்பட்டோர் ஏற்பாடுகள் செய்திருக்கவில்லை.

#### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

நிதிக்கூற்றுக்களிலுள்ள மூன்று கணக்கு விடயங்களின் மீதிகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய ஏடுகள் மற்றும் அட்டவணைகளில் காணப்பட்ட மீதிகளிடையே அவதானிக்கப்பட்ட சமமின்மைகளில் கூட்டுத்தொகை ரூபா 1,103,289 தொகை ஆக இருந்தது.

**1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**(அ) பெறவேண்டிய கணக்குகள்**

(i) 2007 மற்றும் 2008 மற்றும் 2010 ஆண்டுகள் தொடர்பாக வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்த ரூபா 1,427,942 தொகையாக கேள்வி வரி வருமானம் அறவிடப்பட வேண்டியிருந்தது.

(ii) கடன்பட்டோர் காலப் பகுப்பாய்வின் பிரகாரம் கூட்டுத்தொகை ரூபா 57,337,995 தொகைக்கான பெறுமதியில் நீண்ட காலமாக நிலுவையாகக் காணப்பட்ட ரூபா 1,389,729 தொகைக்கான வாகன வாடகை மற்றும் 2014 ஆண்டு தொடர்பாக ரூபா 65,296 இற்கான அபிவிருத்தி உதவியை அறவீடு செய்வதற்காக மீளய்வாண்டு இறுதிவரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்ககுகள்**

ஓய்வூதிய திணைக்களத்திற்கு செலுத்த வேண்டியிருந்த ரூபா 3,617,121 தொகைக்கான பங்களிப்பு தொகை மீளாய்வாண்டு இறுதிவரை செலுத்தியிருக்கவில்லை.

**1.3.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் காணப்படாமை**

தேவையான தகவல்கள் சமர்பிக்கப்படாமையினால் கூட்டுத்தொகை ரூபா 102,479,019 தொகைக்கான 04 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக மெய்மையாய்வதற்கு முடியாதிருந்தது.

**1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்**

2015 ஜுலை 10 திகதிய 02/2015 ஆம் இலக்க நிதி அமைச்சின் சுற்றறிக்கையின் பிரகாரம் சபைக்கு சொந்தமாக பாவணைக்கு உதவாத நிலையில் காணப்பட்ட 06 வாகனங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவினை விஞ்சிய வருமானம் ரூபா 13,693,491 தொகையாக காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 21,017,439 தொகை ஆக இருந்தது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பாக தகவல்கள் கீழே காணப்படுகின்றன.

| வருமான மூலம் | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) வீதவரியும் வரியும் | 5,271,600 | 4,882,392 | 6,072,916 | 4,022,321 | 3,651,000 | 3,496,717 | 4,040,313 | 5,058,853 |
| (ii) வாடகை | 17,075,700 | 15,775,010 | 17,825,633 | 3,179,316 | 18,574,700 | 16,045,804 | 13,835,074 | 5,605,037 |
| (iii) அனுமதிப்பத் திர கட்டணம் | 1,592,000 | 1,669,597 | 1,381,067 | 529,680 | 2,619,100 | 2,277,937 | 2,344,687 | 520,260 |
| (iv) ஏனைய வரு மானங்கள் | 127,046,500 | 105,484,322 | 57,025,583 | 55,780,549 | 153,888,100 | 84,029,867 | 61,328,370 | 29,849,403 |
| மொத்தம் | 150,985,800 | 127,811,321 | 82,305,199 | 63,511,866 | 178,732,900 | 105,850,325 | 81,548,444 | 41,033,553 |

**2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றுகை**

மீளாய்வாண்டிற்கான சிட்டையிடப்பட்ட வருமானம் ரூபா 127,811,321 ஆக காணப்பட்டதுடன், அவற்றில் ரூபா 82,305,199 தொகை சேகரிக்கப்பட்டிருந்தது. முன்னைய ஆண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 41,033,553 தொகைக்கான மொத்த நிலுவைத் தொகை மீளாய்வாண்டு இறுதியளவில் ரூபா 63,511,866 தொகை வரை அதிகரித்திருந்தது.

**2.2.3 வீத வரி**

2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 3,961,536 தெகைக்காக நிலுவை வீதவரியில் ரூபா 5000 தொகையை மிகைத்துள்ள நிலுவை மீதிகள் காணப்பட்ட 59 வரி அலகுகளில் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 879,464 இற்கான நிலுவை ஒன்று அடங்கியிருந்ததுடன் , அவற்றில் ரூபா 146,482 தொகை 2018 ஜுன் மாதம் அளவில் அறவிடப்பட்டிருந்தது நிலுவை வரி தொடர்பாக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 158 (1) பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை

**2.2.4 வாடகை**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபைக்கு சொந்தமான 91 கடைகளில் ரூப 145,210 தொகையொன்று 2017 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டதுடன் அவற்றில் ரூபா 97,360 தொகை 2018 ஜுன் மாதம் அளவில் அறவிடப்பட்டிருந்தது.

(ஆ) 2010 திசெம்பர் 27 திகதி தபபா/பபாகொ/2010/01 இலக்கம் கொண்ட தென்மாகாண உள்ளூராட்சி ஆனையாளரின் சுற்றறிக்கையின் 05 ஆம் பந்தியின் பிரகாரம் கடைகளுக்காக உடன்படிக்கை ஒவ்வொரு மூன்று வருடங்களுக்கு ஒரு முறையும் நாளதுவரை ஆக்கப்பட வேண்டும் எனினும் அதற்கிணங்க செயற்பட்டிருக்கவில்லை.

**2.2.5 ஏனைய வருமானங்கள்**

**விளம்பர பலகை கட்டணம்**

1988 ஆகஸ்ட் 23 ஆம் திகதி 520/7 இலக்கம் அதிவிஷட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட உள்ளூராட்சி நிறுவனங்களின் துணைவிதி இலக்கம் 39 இல் குறிப்பிட்டுள்ள ஏற்பாடுகளுக்கு இணக்கமின்றி பல்வேறு தரப்பினர்களினால் அதிகாரப் பிரதேசத்தில் விளம்பரங்களை காட்சிப்படுத்தப்பட்டிருந்த போதிலும் அந்த துணை விதியின் இலக்கம் 39 (15)(16) இல் குறிப்பிட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் சபையினால் செயற்பட்டிருக்காததுடன், மீளாய்வாண்டு இறுதியளவில் ரூபா 512,830 இற்கான விளம்பர பலகை கட்டணம் அறவிடப்பட வேண்டியிருந்தது.

**2.2.6 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2017 திசெம்பர் 31 திகதி உள்ளவாறு பெறவேண்டிய நீதிமன்றத் தண்டப்பணமாக ரூபா 11,568,592 தொகை மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 15,249,960 தொகை காணப்பட்டது. அவற்றில் ரூபா 6,000,000 தொகைக்கான நீதிமன்ற தண்டப்பணம் 2018 மே மாதத்தில் கிடைத்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம் மக்கள் சுகாதாரம், பொதுபயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது பெருந்தெருக்கல் தொடர்பாக விடயங்களை முறைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல் , பொது மக்களின் சுகபோக வாழ்வு, வசதி மற்றும் நலனோம்பு என்பன சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய கடமைகளை நிறைவேற்றுதல் தொடர்பாக கண்டறிப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**(அ) நிறைவேற்றியிருக்காத செய்பணிகள்**

(i) பாதீடு மற்றும் வருடாந்த செயல் நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த 40 செய்பணிகளில் 04 செய்பணிகள் மாத்திரமே நிறைவேற்றப்பட்டிருந்தன.

(ii) பாதீட்டில் மற்றும் செயல் நடவடிக்கை திட்டத்தில் உட்பட்டிருக்காத 08 நிர்மாண வேலைகள் நிறைவேற்றுவதற்காக ரூபா 4,450,339 தொகை செலவிடப்பட்டிருந்தது.

**(ஆ) செய்பணிகள் நிறைவேற்றுவதில் தாமதம்**

(i) மீளாய்வாண்டு முடிவடைய முன்னர் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த 10 நிர்மான வேலைகள் 2018 ஜனவரி 11 திகதி வரை பூர்த்தி செய்திருக்கவில்லை.

(ii) 2017 ஆண்டிற்கான மாகாண சபை மந்திரிமார் ஏற்பாடுகளின் கீழ் அங்கீகரிக்கப்பட்டிருந்த 06 நிர்மாண வேலைகளுக்காக ரூபா 998,000 இற்கான ஏற்பாடுகள் கிடைத்திருந்த போதிலும் 2018 ஜனவாரி 11 அளவிலும் உடன்படிக்கை ஒன்று மேற்கொள்வற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**(இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

நிலைபேறான அபிவிருத்திகள் 2030 நிகழ்ச்சி நிரலில் நிலைபேறான அபிவிருத்தியின் குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளுக்கான உலகளாவிய சுட்டிகளின் மூலம் சபையின் அதிகாரப் பிரதேசதத்தில் பொது மக்களின் வாழ்கை தரத்தை மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்காக நீண்ட கால திட்டங்கள் சபையினால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2 மனித வள முகாமைத்துவம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியளவில் பதவியணியை சேர்ந்த 03 பதவிகளில் 10 பேர் மிகையாகவும் மற்றும் 08 பதவிகளில் 13 பேர் வெற்றிடங்கள் காணப்பட்டது.

(ஆ) 16 சுகாதார தொழிலாளர் மற்றும் வெளிக்கள வேலை தொழிலாளர்களுக்கான பதவிகளுக்குரிய கடமைகள் தவிர வேறு பதவிகளுக்காக கடமைகள் சாட்டப்பட்டிருந்தன.

(இ) சபையில் சேவையாற்றிய சேவையில் இருந்து நீக்கப்பட்ட மற்றும் சேவை விட்டு சென்றுள்ள 03 பேரிடம் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 87,169 இற்கான முற்பணத்தை அறவீடு செய்வதற்கான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.3.1 உரித்தாக்கப்படாத சொத்துக்கள்**

பிரதேச சபையினால் பயன்படுத்தப்படுகின்ற ரூபா 6,240,000 கிரயத்தையுடைய 13 காணிகள் மற்றும் ரூபா 33,826,187 கிரயத்தையுடைய 81 கட்டிடங்களின் சட்டரீதியான உரிமையை சபைக்கு உரித்தாக்குவதற்கான விடயங்கள் 2018 ஜனவரி 11 திகதி வரை பூர்த்தியடைந்திருக்கவில்லை.

**3.3.2 விளைவற்ற சொத்துக்கள்**

கடந்த ஆண்டு முதல் மீளாய்வாண்டு இறுதிவரையும் சபைக்கு சொந்தமான கொங்கிரீட் கலவை இயந்திரத்தின் மூலம் வருமானம் உழைக்காமல் விளைவற்று காணப்படும்.

**3.4 பெறுகை**

**3.4.1 பெறுகைத் திட்டம்**

பிரதேச சபையினால் மீளாய்வாண்டிற்கான பெறுகை திட்டம் ஒன்று தயாரித்திருக்கவில்லை.

**3.4.2 ஒப்பந்த வேலை நிருவாகம்**

(அ) மீளாய்வாண்டின் போது சபை நிதியத்திலிருந்து மற்றும் மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் நிதி ஏற்பாடுகளின் மூலம் மற்றும் சபை நிதியத்திலிருந்து நிர்மானிக்கப்பட்டிருந்த 04 பாதைகளின் கொடுப்பனவு அறிக்கைகளில் காட்டப்பட்டிருந்த அளவை விட பௌதீக ரீதியாக நிர்மாணிக்கப்பட்டிருந்த அளவு குறைவாக இருந்தமையால் கூட்டுத் தொகை ரூபா 75,642 தொகை மிகையாக செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது சபை நிதியத்திலிருந்து மற்றும் மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் நிதி ஏற்பாடுகளின் மூலம் செயற்படுத்தியிருந்த 09 நிர்மாண வேலைகளுக்காக சரளை கற்கள் வழங்குவதற்காக ரூபா 211,752 தொகை கொடுப்பனவு அறிக்கைகளில் காட்டப்பட்டிருந்த போதிலும் புயங்களுக்காக சரழைக் கற்கள் பதித்து கனப்படுத்தியிருக்கவில்லை.

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மற்றும் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவுகளிடையே பின்வருமாறு கணிசமான அளவு முரண்கள் அவதானிக்கப்பட்டது.

(அ) ஐந்து வருமான விடயங்களில் பிரதிகூலமான முரண்களின் கூட்டுத் தொகை ரூபா 21,562,178 தொகையாக இருந்ததுடன் அப்பெறுமதி 10 சதவீதம் முதல் 33 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது.

(ஆ) ஏழு செலவு விடயங்களில் சேமிப்புகளின் கூட்டுத்தொகை ரூபா 32,115,971 தொகையாகக் காணப்பட்டதுடன் அப் பெறுமதி 14 சதவீதம் முதல் 61 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது.

(இ) ஏற்பாடுத் தொகை ரூபா 10,000 தொகையினை மிகைத்துள்ள 18 செலவு விடயங்களில் பாதீட்டின் மூலம் ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 3,400,000 இற்கான ஏற்பாடுகள் முழுவதும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு

2009 ஜூன் 09 திகதிய DMA/2009(i) ஆம் இலக்கம் கொண்ட முகாமைத்துவக் கணக்காய்வு சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் காலாண்டிற்கு ஒன்று வீதம் வருடாந்த கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் கூட்டங்கள் 04 நடாத்தப்பட வேண்டுமெனினும், மீளாய்வாண்டிற்காக 03 குழுக் கூட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது சபையின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. பின்வரும் கட்டுபாட்டு பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

| முறைமை | குறைபாடு |
|---|---|
| (அ) கணக்கீடு | (i) கணக்கு மீதிகள் குறைவாகவும் மிகையாகவும் காட்டப்பட்டிருந்த மற்றும் கைவிடப்பட்டிருந்த சந்தர்பங்கள் காணப்படல்.<br>(ii) நிலையான சொத்துக்கள் மூலதனப்படுத்தப்படாத சந்தர்பங்கள் காணப்படல் |
| (ஆ) வருமான நிருவாகம் | (i) நிலுவை வீத வரி அறவீடு செய்தல் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.<br>(ii) நிலுவை வாடகை அறவீடு செய்யாமல் மீண்டும் சேவைகள் வழங்கும் சந்தர்பங்கள் காணப்படல்.<br>(iii) புதிய வருமானங்களை உருவாகும் வழிகளை இனங்கண்டிருக்காமை. |
| (இ) நிலையான சொத்துக்கள கட்டுபாடு | (i) நிலையான சொத்துக்களை இலகுவாக இணங்காணக் கூடிய விதமாக குறியீடுகள் இடப்பட்டு அல்லது அவ்வாறு வகைப்படுத்தியிருக்காமை.<br>(ii) காணிகள் மற்றும் கட்டிடங்களை உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்காமை. |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | ஊழியர் முகாமைத்துவம் | (i) | வெற்றிடங்களை நிரப்பாமை மற்றும் மிகைகளை முறைப்படுத்தாமை. |
| | | (ii) | உத்தியோகத்தர்களின் பதவிக்கு உரித்தில்லாத வேறு கடமைகள் காட்டுல். |
| (உ) | பாதீட்டு கட்டுபாடு | (i) | உரிய ஆய்வுகள் மற்றும் மதிப்பாய்வுகளுடன் மதிப்பீடுகள் தயாரித்திருக்கப்படாமை. |
| | | (ii) | பாதீட்டு மற்றும் உள்ளவாறான வருமானங்கள் மற்றும் செலவு இலக்குகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக மதிப்பாய்வு மற்றும் தொடர் செயல் நடவடிக்கை எடுத்திருக்காமை. |
| | | (iii) | 18 செலவு விடயங்களில் ஏற்பாடுகள் முழுவதும் சேமிக்கப்பட்டிருத்தல். |